*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 2, issue 1, pp. 280- 284, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

RESEARCH ARTICLE

# தோப்பிக்கள்: சங்க கால உணவு பண்பாடு

**சத்தியா**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை -600 005.
*Email id: sathyamurugan0507@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

கள், அரியல், தேறல், தோப்பி, நறவு, மட்டு, கந்தாரம் முதலான கள் வகைகளைச் சங்க இலக்கியம் சுட்டுகிறது. இதில் தோப்பிக்கள் என்பது பழங்கள் கொண்டு செய்ய பெறும் ஒரு கள் வகையாகும். இக்கள் வகையை ஆநிரைப் பூசலில் இறந்த வீரனுக்கு வைக்கும் நடுகல்லிற்கு வார்த்த தகவலைச் சங்க இலக்கியம் பகிர்கிறது. இத்தோப்பிக்கள் பற்றி அகநானூற்றை முதன் முதலில் பதிப்பித்த வே.இராஜகோபாலயங்கார் மற்றும் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் பழைய உரையைக் கருத்தில் கொண்டு 'நெல்லாற் செய்யுங்கள்' என்று குறிப்பிடுகின்றனர். இதனை மறுத்து தோப்பிக்கள் பற்றிய செய்முறையையும், அது தொடர்பான சிக்கல்களையும் விளக்கியுள்ளது இக்கட்டுரை.

**Keywords:** தோப்பி, அரியல், நறவு, ஆநிரை பூசல், கற்குடம்

## முன்னுரை

பண்டையத் தமிழ் பண்பாட்டில் 'கள்' மிக முக்கிய பங்கை வகிக்கிறது. கள்ளுண்ணுதல் என்பது சங்க கால உணவு முறையில் அன்றாட நிகழ்வாக இருந்துள்ளது. சங்க கால மக்கள் தங்கள் உணவின் ஒரு பகுதியாகக் கள்ளைப் பருகியுள்ளனர். மன்னன் தன் வீரர்களுக்கு கள் வார்த்த செய்தி (புறம்.289), புலவர்களுடன் மன்னன் அமர்ந்து கள் உண்டு களித்த நிகழ்வு (புறம்.381), சங்க காலப் பெண் புலவரான ஔவை கள் குடிந்து மகிழ்ந்த (புறம்.235,376) காட்சிகளைச் சங்க இலக்கியம் பதிவு செய்கிறது. சங்க காலத்தில் மது பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டுள்ளது. கள், அரியல், தேறல், தோப்பி, நறவு, நறவம், நறா, நனை, மட்டு, மது, பிழி, வெப்பர், மட்டம், மகிழ், மகிழ்பதும், வேரி, கந்தாரம் என்றெல்லாம் அழைக்கப்பட்டது[1]. இதில் தோப்பிக்கள் மிக முக்கியமான கள் வகையாகும். ஆநிரைப் பூசலில் வீரன் ஒருவன் இறந்து படுகிறான். அவன் நினைவாகக் நடுகல் வைக்கப்படுகிறது. இந்நடுகல் முன்பு மறவர்கள் தோப்பிக்கள்ளை வார்த்த செய்தியை அகம்.35-வது பாடல் பதிவு செய்கிறது. இத்தோப்பிக்கள் பற்றிய சிக்கல்களுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை நகர்கிறது.

## பூசலும் நடுகல்லும்

நிரை கவர்தலும் மீட்டலும் வீரயுக காலத்தின் ஒரு அங்கமாகும். புறம் வெட்சி, கரந்தைப் போரைக் காட்சிப்படுத்துகிறது. அகம் பூசல் குழு வாழ்வின் பொருளாதார நிலையை

வெளிப்படுத்துவனவாகவுள்ளன. பொதுவாக இது எப்போது நிகழ்ந்தது என்றால், கால்நடைகள் முதலில் அதனுடைய இறைச்சிக்காவும் பின்னர் பால்படு பொருள்கள் மற்றும் தோலுக்காகவும் (பண்டமாற்றுப் பரிவர்த்தனைக்குப் பயன்படுத்தப்பட்டது) பயன்படுத்தப்பட்டு, இறுதியாக வேளாண்மை, போக்குவரத்து ஆகியவற்றில் ஒரு சக்தியாக உபயோகப்படுத்தப்பட்ட போது தான்[2]. இப்படி இறைச்சிக்காக ஆநிரைப் பூசலில், வழிப்பறியில் ஈடுபட்ட வீரன் இறந்துவிட்டால் அவனுக்கு நினைவுக்கல் வைக்கப்படும். அக்கல்லினை 'நடுகல்' என்று சுட்டுவது மரபு.

தொல்லியல் அடிப்படையில், பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் ஒன்று நடுகல். நடுகல் வைக்கும் இவ்வழக்கம் பெருங்கற்காலத்தின் இறுதிப் பகுதியில் உருவானது. 'நடுகல்' (Herostone) என்பது பெருங்கற்கல்லறைகள் (Megaliths) என்ற சடங்குரீதியான நினைவுச் சின்னங்களில் அடங்கும்[3]. சங்க இலக்கியத்தில் நடுகல் பற்றிய குறிப்புகள் இருபத்தேழு பாடல்களில் உள்ளன[4].

**தோப்பிக்கள்**

தோப்பிக்கள் பற்றி சங்க இலக்கியத்தில் மொத்தம் நான்கு இடத்தில் குறிப்புகள் உள்ளன (அகம்.35, 265, 348; பெரும்.141,142)[5]. தோப்பிக்கள் என்பதற்கு அகநானூற்றை முதன் முதலில் பதிப்பித்த வே.இராஜகோபாலயங்கார் பழைய உரையைக் கருத்தில் கொண்டு 'நெல்லாற் செய்யுங்கள்' என்று பொருள் கூறுகிறார்[6]. இவரைப் பின்பற்றி பிற உரையாசிரியர்களும் 'நெல்லாலாக்கிய கள்' என்றே எழுதியுள்ளனர்[7]. பத்துப்பாட்டிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியரும் இக்கருத்தையே கொண்டுள்ளார். மேலும், தோப்பி, தோப்பிக்கள் என்பதற்கு 'நெல்லாற் சமைத்த கள்', 'நெல்லால் ஆக்கிய கள்' என்று பாட்டும் தொகையும் பொருள் தருகிறது[8]. ஆனால், சங்க இலக்கியம் வழி நமக்கு கிடைக்கும் தகவல்கள் இதற்கு முரணாகவுள்ளன.

அகநானூற்றில் தோப்பி பற்றி அமைந்துள்ள பாடல்களில் குறிஞ்சித்திணையில் உள்ள பாடல் அகம்.348 ஒன்றே ஆகும். தலைவன் சிறைபுறம் நின்றிருக்க, அவன் அறியாதவாறு தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**…………முன்றில்**
**தேன் தேர் சுவைய, திரள் அரை, மாஅத்து,**
**கோடைக்கு ஊழ்த்த, கமழ் நறுந் தீம் கனி**
**பயிர்ப்புறப் பலவின் எதிர்ச் சுளை அளைஇ,**
**இறலொடு கலந்த, வண்டு மூசு, அரியல்**
**நெடுங் கண் ஆடு அமைப் பழுநி, கடுந் திறல்**
**பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான் கோட்டுக்**
**கடவுள் ஓங்கு வரைக்கு ஓக்கி, குறவர்,**
**முறித் தழை மகளிர் மடுப்ப, மாந்தி,**
**அடுக்கல் ஏனல் இரும் புனம் மறந்துழி**
**(அகம்.348:1-10)**

முற்றத்தில் அமைந்துள்ள திரண்ட அடியினை உடைய மாமரத்தில் கோடைக்காலத்தே முதிர்ந்து விளைந்த நல்ல மணங்கமழும் தேன் போன்ற சுவையை உடைய இனிய கனிகளுடன், பிசினையுற்ற பலாவினது ஒளி பொருந்திய சுளைகளையிட்டு, தேனோடு கூட்டிய வண்டு மொய்க்கும் 'அரியலை' அசையும் மூங்கிலின் நீண்ட கணுவில் இட்டு முதிர செய்த பின் கிடைப்பதே தோப்பிக்கள். இக்கள்ளானது பாம்பின் சீற்றத்தை ஒத்து இருக்கும். தோப்பிக்கள்ளை உயர்ந்த மலைக்கு படைத்த பின் தளிராடை அணிந்த மகளிர் உண்ண கொடுப்ப குறவர்கள் அதனை பருகி தினை புனம் காக்கும் தன் கடமையை மறந்தனர்.

இப்பாடல் வழி தோப்பிக்கள் என்பது உரைகளில் சொல்லப்பட்டிருப்பது போல நெல்லாற் செய்யப்படும் கள் அல்ல; மா, பலா, தேன் கலந்து மூங்கில் குழாயில் இட்டு பதப்படுத்தப்பட்டு தயாரிக்கப்படும் ஒரு கள் வகை என்பது உறுதியாகிறது. பெரும்பாணாற்றுப்படை, 'இல் அடு கள் இன் தோப்பி பருகி' (142) என்பதால் இக்கள் வீட்டிலேயே செய்யப்பட்டிருப்பதும் தெரிய வருகிறது.

ஒளி பொருந்திய கூந்தலை உடைய தலைவி தன் வளை நெகிழ்ந்து விழ பசலை நோயோடு புலம்புவதாக அமைந்துள்ள அகம்.265-வது பாடல் நிரைப் பூசலின் பின்பு வீரர்கள் தோப்பிக்கள் பருகுவதைத் தெரிவிக்கிறது. தொல்காப்பியர் சுட்டும் 'உண்டாட்டு' எனும் துறை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

**…………...பொறை அடைந்து**
**இன் சிலை எழில் ஏறு கெண்டி**
**நிணம் பொதி விழுத்தடி நெருப்பின் வைத்து எடுத்து**
**அணங்கு அரு மரபின் பேஎய் போல**
**விளர் ஊன் தின்ற வேட்கை நீங்க**
**துகள் அற விளைந்த தோப்பி பருகி**
**குலாஅ வல் வில் கொடு நோக்கு ஆடவர்**
**புலாஅல் கையர் பூசா வாயர்**
**(அகம்.265:11-18)**

வலிமையான வில்லையும் கொடிய பார்வையையும் உடைய



©2023 by KRISHMA PUBLICATION 

'ஆடவர்' குன்றினை அடைத்து கொண்டு இனிய முழக்கத்தைச் செய்யும் எருதினைக் கொன்று அதில் கொழுப்புடைய சிறந்த தசையை நெருப்பில் சுட்டு எடுத்து பிறரை வருத்தும் பேய் போல உண்பர். அவ்வூணைத் தின்றதால் ஏற்படும் வேட்கையைத் தீர்க்க குற்றமற்ற தோப்பிக்களைப் பருகினர்.

மேலும், பெரும்பாணாற்றுப்படையில் குறிஞ்சி நில மக்களின் இயல்பையும் தொழிலையும் கூறும் பகுதியில் தோப்பிக்கள் பேசப்பட்டுள்ளது.

**நாள் ஆ தந்து, நறவு நொடை தொலைச்சி**
**இல் அடு கள் இன் தோப்பி பருகி**
**(பெரும்.141,142)**

பகலில் சென்று ஆநிரை கவர்ந்து வந்த காளையைப் போன்ற வீரன் அந்நிரைகளைக் கள்ளிற்கு (நறவு) விலையாகக் கொடுத்துவிடுவான். பின் இல்லில் செய்யப்படும் கள்ளாகிய தோப்பியையும் பருகுவான்.

மேற்கூறிய இரண்டு பாடல்களிலும் (அகம்.265; பெரும்.141,142) ஆநிரைக் கவரப்பட்டு உணவாகியுள்ளது. இதனால் ஆநிரைப் பூசலில் ஈடுபடும் வீரனுக்கு தோப்பிக்கள் இன்றியமையாத ஒன்றாக இருந்திருப்பதை இதன் வழி அறிய முடிகிறது.

**நிரைப் பூசலும் தோப்பிக்கள்ளும்**

தலைவி தலைவனோடு உடல்போக்கில் சென்றுவிட்டால். அதனால், வானை முட்டும் மதிலை உடைய அவள் மனை தனிமை அடைந்துவிட்டது. தலைவனுடைய மார்பைப் பற்றுக்கோடாகக் கொண்டு தலைவி நலனோடு இருக்க வேண்டும் என்று நற்றாய் தெய்வத்திடம் வேண்டுவதாக அமைந்துள்ளது அகம்.35-வது பாடல். இதில் தலைவனும் தலைவியும் கடந்து செல்லும் பாலை நில வழியை நற்றாய் எண்ணி வருத்தம் கொள்கிறாள். இந்த பாலை நில வழியில் நிரைப் பூசல் ஏற்பட்டு இறந்துபட்ட வீரனுக்கு நடுகல் வைக்கப்படுகிறது. இதனை விவரிக்கும் இப்பாடலில் தோப்பி பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது.

தோப்பிக் கள் என்பது ஆநிரை பூசலின் பின்பும் பருகுவது மட்டுமல்லது நடுகல் சடங்கிலும் பருகப்பட்டிருப்பது இப்பாடல் வழி அறியலாம்.

**தனிமணி இரட்டும் தாளுடைக் கடிகை**
**நுழைநுதி நெடுவேற் குறும்படை மழவர்**
**முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த**
**வில்லேர் வாழ்க்கை விழுதொடை மறவர்**
**வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்**
**நடுகல் பீலி சூட்டித் துடிபடுத்துத்**
**தோப்பிக் கள்ளோடு துரூஉப்பலி கொடுக்கும்**
**போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரம்**
**(அகம்.35:3-10)**

பருக்கைக்கற்கள் உள்ள மேட்டு நிலத்தில் வில்லே ஏராகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் குறி தப்பாத அம்பினையுடையவர்கள், மறவர்கள். இவர்கள் ஒப்பற்ற மணிகள் ஒலிக்கும் கடையாணி இட்ட காம்பினை உடைய கூர்மையான நெடிய வேலையும் சிறிய சேனையையும் கொண்ட மழவர்களை வீழ்த்தினர். மழவர்கள் கவர்ந்த ஆநிரைகளை மீட்டனர். இப்பூசலில் இறந்த வீரனுக்கு பிற வீரர்கள் பதுக்கை இருக்கும் இடத்தில் நடுகல் வைக்கின்றனர். மேலும், அந்நடுகல்லிற்கு மயில் தோகை சூட்டி, துடி இசைத்து, தோப்பிக்கள்ளோடு செம்மறியாட்டுக் குட்டியைப் பலி கொடுத்து சடங்கினை நிறைவுச் செய்கின்றனர்.

நடுகல் வைக்கும் சடங்கு முறையில் தோப்பிக்கள் முக்கிய இடத்தில் இருப்பது இதன் வழியறியலாம். பூசலுக்கோ போருக்கோ செல்வதற்கு முன்பு வீரர்கள் கள் குடித்து செல்லும் மரபைச் சங்க இலக்கியத்தில் காணலாம். வீரன் கல்லான பின்பும் கள் வைப்பது அவ்வீரன் இறந்தவனாக கருதப்படாது தங்களோடு வாழ்பவனாக எண்ணிய நிலையைக் காட்டுகிறது.

**கற்குடம்**

பல்லவர் கால நடுகற்கள் 'கள்' பற்றி மேலும் சில குறிப்புகளைத் தருகின்றன. பல்லவர் கால நடுகற்கலில் மன்னனின் பெயர், அவன் ஆட்சியாண்டு, இறந்துபட்ட வீரனின் பெயர், அவன் ஊர், அவன் இறந்ததின் காரணம் முதலான தகவல்கள் தமிழி மற்றும் வட்டெழுத்துகளில் பொறிக்கப்பட்டிருக்கும். அதில் வீரனின் புடைப்பு சிற்பமும் இடம் பெற்றிருக்கும். இறந்துபட்ட வீரன் இடது கையில் வில்லுடனும் வலது கையில் வாளுடன் காட்சியளிப்பான். இடையில் குறுவாள் சொறுகப்பட்டிருக்கும். இடது கால் முன்னோக்கி நகர்ந்திருக்கும். வீரனின் காலடியில் ஒரு கெண்டி, சிமிழ் போன்ற ஒன்று அமைந்திருக்கும். இதனை 'கற்குடம்' என்பர்.

சிலர் நடுகல் வீரனுக்குரிய கோயில் என்று கருதுகின்றனர். மற்றும் சிலர் சைவ சமயத்தினைக் குறிக்கும் சிவலிங்கம் என்று கூறுகின்றனர். பல்லவர் காலம் முழுவதும் கிடைக்கின்ற நடுகற்களில் மேலுலகம் பற்றிய கோட்பாடே குறிக்கப்படவில்லை[9]. இதனால், இறந்த வீரனுக்கு படைக்கப்படும் கள் என்று இதனைக் கொண்டால் சங்க கால மரபான நடுகல்லிற்கு கள் படைக்கும் வழக்கம் பல்லவர் காலத்திலும் தொடர்ந்திருப்பது உறுதியாகிறது. இன்றும்

இறந்தவர்களுக்கு மது வைத்து படைப்பது வழக்கமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.



படம்(1)



படம்(2)



படம்(3)

**முடிவுரை**

தோப்பிக் கள் என்பது ஆநிரை பூசலின் பின்பு மட்டுமல்லது நடுகல் சடங்கிலும் பருகபட்டிருப்பது சங்க இலக்கியம் வழி அறியலாம். இது இல்லில் செய்யப்படும் ஒரு கள் வகை ஆகும் (பெரும்.142). எந்த குற்றமும் இல்லாமல் விளைவிக்கப்படும் (அகம்.265:17) இக்கள்ளானது பாம்பின் சிற்றத்தைப் போலிருக்கும் (அகம்.348:6,7). தேன் போல் இனிமை கொண்ட, கோடைகாலத்தில் முதிர்ந்த மாங்கனியும் பிசினையுற்ற பலா சுளையும் தேனுடன் கூட்டி மூங்கிலின் நீண்ட குழாயில் இட்டு முதிர செய்வதுதான் தோப்பிக்கள் (அகம்.348). இக்கருப்பொருட்கள் குறிஞ்சிக்குரியவை ஆகும். இதனால், இத்தொல்குடியினர் குறிஞ்சி நிலத்தவர் என்பது உறுதியாகிறது. உரையாசிரியர்களின் கருத்துப்படி, தோப்பிக்கள் என்பது 'நெல்லாற் ஆக்கிய கள்' இல்லை; மா,பலா, தேன் என இயற்கையாக விளைந்த பொருள் கொண்டு செய்ய பெறும் கள் வகையாகும். இப்பாடல்கள் வழி உரையாசிரியர்களின் தோள் மேல் அமர்ந்து சங்க இலக்கியத்தை வாசிக்கும் முயற்சி எல்லா இடங்களிலும் கை கொடுக்காது என்பதும் நாம் உணரக்கூடியதே.

1. பக்தவத்சல பாரதி, சங்ககாலத் தமிழர் உணவு, ப.121.
2. கா. சிவதம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம், ப.184.
3. பாட்டும் தொகையும். ப.197.
4. அகம். 35, 53, 67,131, 179, 269, 289, 297, 343, 365, 387; புறம். 221, 223, 232, 260, 261, 263, 264, 265, 306, 314, 329, 335; ஐங்-352; மலை.386-389; பட்.78,79.
5. சங்க இலக்கியத் தொடரடைவு
6. வே.இராஜகோபாலையங்கார், அகநானூறு மூலமும் உரையும், ப.58.
7. ந.மு.வேங்கடசாமி நாட்டார், அகநானூறு மூலமும் உரையும், ப.87.
8. பாட்டும் தொகையும், ப.101.
9. ர.பூங்குன்றன், தொல்குடி-வேளிர்-அரசியல், ப.35.

**துணைநூற்பட்டியல்**


1. **அகநானூறு மூலமும் உரையும்,** இராஜகோபாலையங்கார்.வே., கம்பர் விலாசம், மயிலாப்பூர், சென்னை, **1933 (**முதற்பதிப்பு**).**
2. **அகநானூறு மூலமும் உரையும்,** ந.மு.வேங்கடசாமி நாட்டார், பாரதி பதிப்பகம், சென்னை, **2022 (**முதற்பதிப்பு**).**
3. **அகநானூறு மூலமும் உரையும் (மர்ரே பதிப்பு),** நியூ சென்சுவரி புக் ஹவுஸ், சென்னை, **1981 (**இரண்டாம் பதிப்பு**).**
4. **சங்க இலக்கியத் தொடரடைவு, [www.tamilconcordance.com](www.tamilconcordance.com)**
5. **பாட்டும் தொகையும் (மர்ரே பதிப்பு),** நியூ சென்சுவரி புக் ஹவுஸ், சென்னை, **1958 (**முதற்பதிப்பு**).**
6. **பத்துப்பாட்டு மூலமும் உரையும்,** நச்சினார்க்கினியர் உரை, உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, **2019 (**ஒன்பதாம் பதிப்பு**).**
7. சிவதம்பி.கா., **பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி,** நியூ சென்சுவரி புக் ஹவுஸ், சென்னை, **2019 (**இரண்டாம் பதிப்பு**)**
8. பக்தவத்சல பாரதி, **சங்ககாலத் தமிழர் உணவு,** காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், **2021** (முதற்பதிப்பு)

9. *பூங்குன்றன்.ர.,* **தொல்குடி-வேளிர்-அரசியல்,** *நியூ செஞ்சுவரி புக் ஹவுஸ்,* *சென்னை,* **2019 (***இரண்டாம் பதிப்பு***).**

*****